பக்கங்கள் 17+4

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## பிக்கு வெறியாட்டம்; வயோதிபர் மரணம்!

வீடொன்றில் தங்கியிருந்த பிக்கு ஒருவர் தாக்கியதில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குருநாகல் – கிரியுல்ல, மாரவில பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 வைகாசி 26 சனிக்கிழமை 08.05.2024 அதிர்வு 313



### தமிழகத்தின் ஆதரவின்றி

# மோடி வெற்றி பெற்றமை இலங்கைக்கு நன்மையே!

### இப்படிச் சொல்கின்றார் கம்மன்பில



**இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் வெற்றி இலங்கைக்குச் சாதகமாக அமையும் என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.**

**இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,**

**“இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி கூட்டணி 300 முதல் 350 ஆசனங்களைக் கைப்பற்றக்கூடும் என எதிர்பார்த்தேன். எப்படி இருந்தாலும் பிரதமர் மோடியின் வெற்றி இலங்கைக்கு நன்மை பயக்கும்.**

ஏனெனில் இந்தியாவில் நிலையானதொரு ஆட்சி இருக்கும்போது, இலங்கை தொடர்பான கொள்கையை மத்திய அரசே தீர்மானிக்கும்.

சிலவேளை மத்திய அரசு பலவீனமாகி, ஆட்சியமைக்க தமிழ் நாட்டின் உதவி தேவைப்படும் பட்சத்தில் இலங்கை தொடர்பான கொள்கையைத் தமிழகமே தீர்மானிக்கும். அப்போதுதான் இரு நாட்டுக்கும் இடையிலான உறவில் தாக்கம் ஏற்படும். எனினும், தமிழகத்தின் ஆதரவின்றி மோடி வெற்றி பெற்றிருப்பது இலங்கைக்கு நல்லதே.” – என்றார்.

# ரயிலுடன் கார் மோதியதில் தந்தையும் மகளும் மரணம்!

### வத்தளையில் இன்று காலை துயரம்

(அஸ்ஹர் இப்றாஹிம், எம்.எப். றிபாஸ்)

வத்தளை – எந்தேரமுல்ல ரயில் கடவையில் இன்று காலை இடம்பெற்ற விபத்தில் பியகம பகுதியைச் சேர்ந்த இருவர் உயிரிழந்துள்ளனர்.

எந்தேரமுல்லயில் இருந்து வத்தளை நோக்கிப் பயணித்த கார் எச்சரிக்கை சமிக்ஞையை மீறி ரயில் கடவையைக் கடக்க முயன்ற போது எதிரே வந்த ரயிலுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று தெரிவித்துள்ளனர்.

04





# ரணிலின் முடிவுக்காக காத்திருக்கும் மொட்டு

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தனது நிலைப்பாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்த பின்னரே மொட்டுக் கட்சியின் நிலைப்பாட்டை அறிவிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தவுள்ளதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அவர் அந்த நிலைப்பாட்டை அறிவித்த பின்னரே எமது கட்சியின் தீர்மானம் எடுக்கப்பட்டு, அது கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவால் அறிவிக்கப்படும்.

அதேவேளை, தேர்தலை முன்கூட்டி நடத்தியே எமது கட்சிக்குப் பழக்கம். எனவே, தேர்தல்களை ஒத்திவைக்கும் முயற்சிக்கு அதுரவு வழங்கப்படமாட்டாது. எத்தகைய யோசனைகள் வந்தாலும் உரிய நேரத்தில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற எமது கட்சியின் நிலைப்பாடு மாறாது." - என்றார்.

# குணதிலக தாக்கப்பட்டமை குறித்து 3 எம்.பிக்களிடம் வாக்குமூலம் பதிவு



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குணதிலக ராஜபக்ஷ தாக்கப்பட்டமை தொடர்பில் இதுவரை மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற வளாகத்தில் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கமைய, நாடாளுமன்ற உறுப்பினர்களான சஹன் ப்ரதீப், மதுர விதானகே மற்றும் லலித் வர்ணகுமார ஆகியோரிடமே வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

வாக்குமூலங்கள் தொடர்பில் விரைவில் நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது என்றும் பொலிஸார் கூறினர்.

எவ்வாறாயினும், தாக்குதலை மேற்கொண்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகேவிடம் இதுவரை வாக்குமூலம் பெறப்படவில்லை என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கடந்த திங்கட்கிழமை மாலை, ஜனாதிபதி செயலக வளாகத்தில் நடைபெற்ற கூட்டத்தின் பின்னர் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று கோட்டை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவால் நடத்தப்பட்ட தாக்குதலில் நாடாளுமன்ற உறுப்பினர் குணதிலக ராஜபக்ஷவின் கால் உடைந்துள்ளது என்று பொலிஸ் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டிருந்தது.




# யாழில் சுயமரியாதை நடைபயணம்

(எஸ்.நிதர்ஷன்)

சமத்துவம், சமத்துவம், சமூக நீதியை அடிப்படையாகக் கொண்டு சுயமரியாதை நடை பயணம் யாழ்ப்பாணத்தில் இன்று காலை முன்னெடுக்கப்பட்டது.

யாழ். பஸ் நிலையம் முன்னால் இருந்து ஆரம்பித்த நடை பயணம், முதலில் சத்திரச் சந்தியை நோக்கிப் பயணித்து பண்ணை வீதியூடாகப் பொலிஸ் நிலைய வீதி, பொது நூலகம் முன்பாக நிறைவடைந்தது.

இந்த நடை பயணத்தில் பங்கேற்றோர் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு பேரணியாகச் சென்றனர்.

இதில் இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வாஸ் உள்ளிட்ட தூதரக அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



















# கண்டியைச் சேர்ந்த தமிழ் மாணவி மாயம்!



## கண்டுபிடிக்க உதவுமாறு கோரிக்கை

கண்டி, கெல்லாபோக்க மடுல்கலை பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவி ஒருவர் காணாமல்போயுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹறிவதனி என்ற உயர்தர மாணவி நேற்று வெள்ளிக்கிழமை முதல் காணாமல்போயுள்ளார் என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று அவரது சகோதரி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், மேற்படி மாணவி தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் (+94 78 171 3389 டிலாந்தினி ) என்ற இலக்கத்துக்கு அறிவிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஐஸ் போதைப்பொருளுடன் பஸ் சாரதி, நடத்துநர் கைது!

(பாறுக் ஷிஹான்)

ஐஸ் போதைப்பொருளை நீண்ட காலமாகப் பயன்படுத்தி விநியோகத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் தனியார் பஸ் சாரதி மற்றும் நடத்துநர் ஆகியோரைப் பெரியநீலாவணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம், பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாண்டிருப்பு - தாளவட்டுவான் சந்தி அருகில் நேற்று இரவு சந்தேகத்துக்கிடமாக இருவர் நடமாடுகின்றனர் என்று கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டுக்கமைய அங்கு சென்ற பொலிஸார் மேற்படி இருவரையும் சோதனை மேற்கொண்டனர்.



இதன்போது தனியார் பஸ் சாரதி மற்றும் நடத்துநர் என அடையாளம் காணப்பட்ட இவ்விரு சந்தேகநபர்கள் வசம் இருந்து ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டது.

மேற்படி இரு சந்தேகநபர்களிடம் இருந்தும் 3 ஆயிரத்து 300 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டது.

32 மற்றும் 37 வயதுடைய இரு சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகளைப் பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜே.எஸ். கே.வீரசிங்க தலைமையிலான பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# பொலிஸ் அதிகாரி, ஆசிரியர் உட்பட ஐவர் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் கைது!

புதையல் தேடிய சம்பவம் தொடர்பில் பொலிஸ் அதிகாரி, ஆசிரியர் உட்பட ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விடுதலைப்புலிகளின் அன்பு முகாம் இருந்த பகுதியில் நேற்று இரவு 10.30 மணியளவில் புதையல் தோண்டியபோது மேற்படி சந்தேகநபர்கள் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அழகாபுரி பகுதியில் விடுதலைப்புலிகளால் அன்பு முகாம் அமைக்கப்பட்டிருந்த பகுதியில் ஸ்கானர் மூலம் புதையல் தேட முயற்சித்த குற்றச்சாட்டிலேயே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.



இதன்போது 2 இலத்திரனியல் ஸ்கேனர் இயந்திரங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் தலைமையகத்தில் கடமையாற்றும் பொலிஸ் பரிசோதகர் மற்றும் தென்னிலங்கை பாடசாலை ஒன்றில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் உட்பட ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் கைதானவர்கள் இராமநாதபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

மேற்படி சந்தேகநபர்களை மருத்துவ பரிசோதனைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**பிக்கு வெறியாட்டம்...**

ஒருவர் காயமடைந்த நிலையில் வீடொன்றுக்குள் இருக்கின்றார் என்று கிரியுல்ல பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் காயமடைந்த நபர் கண்டுபிடிக்கப்பட்டார்.

பின்னர், காயமடைந்தவர் தம்பதெனிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மாரவில பிரதேசத்தில் வசிக்கும் 72 வயதான நபரே உயிரிழந்தார்.

சந்தேகநபரான பிக்கு உயிரிழந்தவரின் உறவினர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபர் விகாரை ஒன்றில் வசிக்காமல் மாரவில பிரதேசத்தில் உள்ள தனது தாய் வீட்டில் வசித்து வந்தார் என்றும், அவர் மதுப் பழக்கத்துக்கு அடிமையாகி இருந்தார் என்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரான பிக்கு அந்தப் பகுதியை விட்டுத் தப்பிச் சென்றுள்ள நிலையில், தாக்குதலுக்கான காரணம் இதுவரையில் வெளியாகவில்லை.

கிரியுல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**ரயிலுடன்...**

இதன்போது காரில் பயணித்த 54 வயதுடைய தந்தையும், கொழும்பில் தனியார் நிறுவனத்தில் கடமை புரியும் 34 வயதுடைய மகளும் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை எந்தேரமுல்ல பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# மரண அறிவித்தல்

தோற்றம்
22 - 12 - 1944



மறைவு
06 - 06 - 2024

# முத்துகண்ணு செல்வராஜா தேவர்

இறக்வானயைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமகவும் கொண்ட திரு. M. செல்வராஜா தேவர் அவர்கள் 6.6.2024 வியாழக்கிழமையன்று சிவப்பத மடைந்தார்.

அன்னார் (late.)முத்துக்கண்ணு தேவர் (late.) பாலாமணி அம்மாளின் அன்பு புதல்வனும், (late.) தனலட்சுமியின் அன்பு கணவரும், கருணாகரன், சுபதர்ஷினி, தனராஜ் ஆகியோரின் அன்பு தந்தையும், சிவராஜா, ராஜபிரஷாந்தினி, மாள விகா ஆகியோரின் மாமனாரும் Harithra, Akshayan, Yaatharsh ஆகியோரின் தாத்தாவும், (late) வெள்ளதாயி, (late) பால்சாமி தேவர், தேவராஜா தேவர், (late) சகுந்தலாதேவி, சந்திரமோகன் தேவர், பாக்கியலக்ஷ்மி, இந்திராணி, (late) ராசாதேவி, ராசாதேவன் தேவர், பவளராணி, செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் சனிக்கிழமை (8.6.2024) 7.30 மணி முதல் LANKA FLORISTS (Punchi Borella) வைக்கப்பட்டு 9.6.2024 ஞாயிற்றுக்கிழமை 12 மணியளவில் இறுதி கிரியைகள் நடைபெறும். பின்னர் அவரின் பூதவுடல் 2 மணியளவில் Borella பொது மயானத்திற்கு எடுத்துசெல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
**கருணாகரன் (கண்ணா), சுபதர்ஷினி (சுபா), தனராஜ்**
0773242032

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## இழுத்தடிப்பின் காரணம்

அரசியல் தந்திரத்தில் இப்போது உள்ள அரசியல்வாதிகளில் எல்லோரையும் விஞ்சியவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

யாருடன் அணி சேருவார், யாரை வெட்டுவார் என்பதை பிறர் கற்பனை பண்ணிப் பார்க்க முடியாத விதத்தில் கையாளும் தகைமை படைத்தவர் அவர்.

விடுதலைப் புலிகளின் ஆபத்பாந்தவனாக கூட ஒரு காலத்தில் நடித்தவர். தேவைப்பட்டால் வடக்கு, கிழக்கில் தமிழர்களுக்கு உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சமஷ்டித் தீர்வை வழங்கவும் தயார் என்பார். இன்னொரு சமயத்தில் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கும் பொலிஸ், காணி அதிகாரப் பகிர்வு விடயங்களை நடைமுறைப்படுத்துவதாயின் நாடாளுமன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும் என்று புதிய 'அரசியல் பாடத்தை' நாட்டுக்கே அவர் போதிப்பார்.

காலங்காலமாக தமது அரசியல் எதிரியாக இருந்த ராஜபக்ஷக்களைக் கொண்டே ஜனாதிபதிப் பதவியைத் தேடித் தமது மடிக்கு வரப் பண்ணிய நரி தந்திரம் அவரிடம் உண்டு.

இப்போது முக்கிய ஒரு கட்டத்தில் அவர் இருக்கின்றார். தாம் தற்போது வகிக்கும் ஜனாதிபதிப் பதவியை வரும் தேர்தலின் பின்னரும் தொடர்வது எப்படி என்பதுதான் அவரின் சமயோசிதம்.

இன்றைய நிலையில் அடுத்த மூன்று மாதங்களுக்கு அவர்தான் ஜனாதிபதி. அதில் அவருக்குப் பிரச்சினை இல்லை. ஆனால் வரக் கூடிய ஜனாதிபதி தேர்தல் முடியும் வரை, தற்போதைய ஜனாதிபதி என்ற முறையில் நாடாளுமன்றத்தையும் அரசையும் அவர் கொண்டிழுக்கவும் வேண்டும்.

வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமது நலன் கருதி தாம் முடிவு ஏதும் எடுக்கப் போய், அதனால் தற்போதைய நாடாளுமன்றக் கட்டொழுங்கு குழம்பிப் போய் விட்டால் தமது தற்போதைய ஆட்சியே சிக்கலாகி விடும், அது தமது ஜனாதிபதி தேர்தல் வெற்றியை அடியோடு பாதிக்கச் செய்துவிடும் என்று அவர் கருதுகிறார்.

அதனால்தான் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தமது அணுகுமுறையை - வியூகத்தை - திட்டத்தை - அவர் கடைசி வரை வெளிப்படுத்தாமல் இழுத்தடித்து, ஒளித்துப் பிடித்து விளையாடுகின்றார்.

மறு தரப்புக்கள் தம்மை குறித்து ஒரு முடிவு எடுக்க விடாமல் தடுமாறும் நிலையை அவர் நீடிக்கச் செய்கிறார்.

இதனை நன்கு புரிந்து கொண்ட இலங்கை அரசியலின் மற்றொரு ஜாம்பவான் மஹிந்த ராஜபக்ஷவும் ரணிலுக்கு பதில் காய் நகர்த்தல்களை கனகச்சிதமாக கையாள முயற்சிக்கின்றார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தல் தொடர்பான தனது முடிவை - உத்தேசத்தை - தீர்மானத்தை - ஜூன் 15ஆம் திகதிக்குள், அதாவது அடுத்த ஒரு வாரத்துக்குள், வெளிப்படுத்தாவிட்டால் தங்கள் ஜனாதிபதி வேட்பாளரை தாங்கள் அறிவித்து, தங்கள் பாட்டில் நகரத் தொடங்கி விடுவார்கள் என்ற காலக்கெடுவை உத்தியோகப்பற்றற்ற முறையில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மஹிந்தர் தெரியப்படுத்திவிட்டார் எனக் கூறப்படுகிறது.

அப்படி ஒரு நிலைமை நேர்ந்தால், நாடாளுமன்றத்தில் ரணிலின் அரசுக்கு மொட்டுக் கட்சி காலை வாரும். மொட்டின் சார்பிலான அமைச்சர்கள் சிலர் ரணிலின் 'கோர்ட்'டைப் பற்றிய படி தொங்கிக் கொண்டிருந்தாலும், மொட்டு முழுமையாகவே ரணிலுக்கு எதிர்ப்புறத்தில் அமர்ந்து கொள்ளும். தனக்கு மாறான ஒரு தரப்பின் அரசுக்கு ஜனாதிபதியாக தலைமை வகிக்கும் நெருக்கடி ஜனாதிபதி தேர்தல் முடியும் வரை ரணில் விக்கிரமசிங்கவுக்கு நீடிக்கும். அரச நாடாளுமன்றக் குழு அவரின் சொற்படி இயங்குவதாக இருக்காது.

இப்போது இருப்பது போல தம்மிஷ்டப்படி - தம் விருப்பப்படி - தமது சொந்த அரசை கொண்டு நடத்துவது போல - அப்போது அவரால் அரசை நடத்த முடியாது. அவர் எதிர்பார்த்த சட்டங்களைக் கூட நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாது.

அத்தகைய நெருக்கடி தேர்தல் நெருங்கும்போது தமக்கு வரும், தாம் ஒரு தீர்க்கமான தீர்மானத்தை எடுக்க வேண்டி இருக்கும், அதைத் தவிர வேறு வழி இல்லை என்பவை எல்லாம் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஏற்கனவே நன்கு தெரியும்.

ஆனால், தவிர்க்க முடியாத அந்த நெருக்கடியைத் தேர்தல் நெருங்கும் கடைசி கட்டம் வரை தள்ளிப் போட அவர் எண்ணுகின்றார். அதன் வெளிப்பாடுதான் முடிவை எடுக்காமல் அல்லது அறிவிக்காமல் இழுத்தடிக்கும் அவரின் தந்திரத்தின் பின்னணி.





# ஐரோப்பிய நாடுகளுக்கு ஆன்மிக பயணம் செய்யும் கயிலைப் புனிதர்



( வி.ரி.சகாதேவராஜா)

பேரூர் ஆதீனம் 25 ஆவது குருமகா சந்நிதானம் கயிலைப் புனிதர் முனைவர் சாந்தலீங்க மருதாசலம் அடிகளார் ஐரோப்பிய நாடுகளுக்கு ஆன்மிகப்பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

2 ஆவது உலக முருக பக்தி மாநாட்டை , உலகில் உள்ள முருகன் ஆலயங்கள் , ஆதீனங்கள் , மடாலயங்கள் , சந்நிதானங்களை இணைத்து , சுவிஸ் நாட்டில் மிகச்சிறப்பாக நடத்தியவரும் செங்காளன் கதிர்வேலாயுதசாமி ஆலயத்தின் முன்னாள் தலைவருமான வேலுப்பிள்ளை கணேசகுமாரின் ஏற்பாட்டில் சுவிட்ஸர்லாந்து, ஜேர்மனி, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் உள்ள ஆலயங்கள், ஆச்சிரமங்களுக்குச் சென்று ஆசிகளை வழங்கி வருகின்றார்.







# புலம்பெயர் மண்ணில் தமிழ் செழித்திட தாய்மொழி உரையாடலே அவசியம்!

## சிட்னி நூல் வெளியீட்டில் மாத்தளை சோமு தெரிவிப்பு

ஏதிர்காலத்தில் தமிழ் சமுதாயம் எத்தகைய வழியில் புலம்பெயர் நாடுகளில் மொழிப்பற்றுடன் வாழ வேண்டும் என்பதற்கு இன்றைய தமிழ் ஆர்வலரகளும், அறிஞர்களும், எழுத்தாளர்களும் வழிகாட்ட வேண்டும். இதன் மூலமே எதிர்கால சந்ததி செழிப்பாக தாய் மொழிப்பற்றுடன் வாழ முடியும் என்று எழுத்தாளர் மாத்தளை சோமு தெரிவித்தார்.

சிட்னி தமிழ் மன்றத்தின் ஆதரவில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியீடும் இலக்கிய அரங்கும் கடந்த நேற்று (07) நடைபெற்றது.

பாலஸ்தீனம் எரியும் தேசம், ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல், இலங்கை இதழியலில் சிவகுருநாதன் ஆகிய ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியீடு சிட்னியில் உள்ள பெமுள்வே சமூக மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தலைமையுரையை எழுத்தாளர் மாத்தளை சோமு நிகழ்த்தினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புலம்பெயர் மண்ணில் தமிழ் மொழியைப் பேணிக் காத்திட வீடுகளில் குழந்தைகளுடன் தாய் மொழியில் உரையாட வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்து உரையாற்றினார்.

நிகழ்வில் 'பாலஸ்தீனம் எரியும் தேசம்' நூல் அறிமுகவுரையை தனபாலசிங்கம் நிகழ்த்தினார். அதன்பின் 'ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல்' நூலின் அறிமுகவுரையை டாக்டர். ஹாரூன் காசிம் ஆற்றினார்.

'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' நூலின் அறிமுகவுரையை எழுத்தாளர் சுந்தரதாஸ் ஆற்றினார்.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் சிறப்புரை நிகழ்த்தினார். அத்துடன் திருநந்தகுமார், பாடும் மீன் சிறிஷ்கந்தராஜா ஆகியோரும் சிறப்புரை ஆற்றினர்.

ஏற்புரையை ஐங்கரன் விக்கினேஸ்வரா நிகழ்த்தினார்.

# 'அமிர்தகளி மண்ணும் மட்டிக்களி ஆறும்' நூல் வெளியீடு!









**(பழுவூரான்)**

குழந்தை எழுத்தாளர் ஒ.கே. குணநாதன் எழுதிய 57 ஆவது நூலான 'அமிர்தகளி மண்ணும் மட்டிக்களி ஆறும்' நாவல் வெளியீடு மட்டக்களப்பு அமிர்தகளி ஸ்ரீ சித்தி விநாயகர் மகா வித்தியாலய மண்டபத்தில் சனிக்கிழமை (01) இடம்பெற்றது.

இந்த நிகழ்வு கூத்துக் கலைஞர் ஒ.கணபதிப்பிள்ளையின் அகவை நூறு நிகழ்வாக வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்ட தமிழறிஞர் தமிழ்மணி அகளங்கன் தலைமையில் நடைபெற்றது.


இந்த நிகழ்வில் பிரதம அதிதிகளாக இளைஞர் விவகார விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் கே .மகேசன், மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன், வைத்திய நிபுணர் பேராசிரியர் கருணாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதிதிகள் வரவேற்பு நிகழ்வுடன், மங்கல விளக்கேற்றப்பட்டு கூத்துக் கலைஞரின் நிழலுருவுக்கு மாலை அணிவித்து தமிழ்த்தாய் வணக்கத்துடன் நிகழ்வு இடம்பெற்றது.

அமிர்தகளி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலய குருவின் ஆசியுடன் வரவேற்புரை, தலைமையுரை அரங்கேறின.

இதன்போது புத்தக அறிமுகவுரையைக் கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவக நாடகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி உமா சிறிசங்கரும், புத்தக விமர்சன உரையைச் செங்கதிர் இதழாசிரியர் செங்கதிரோன் த.கோபாலகிருஷ்ணனும் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் அமிர்தகளி ஸ்ரீமா மாங்கேஸ்வரர் ஆலயத்தினரால் குழந்தை எழுத்தாளர் ஒ. கே. குணநாதன் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.


Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Haram NEK 318
Haram NEK 473
Haram NEK 477
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555



# பாரிய இரண்டு மரங்களால் அச்ச நிலையில் மாணவர்

**(மஸ்கெலியா)**

ஹட்டன் கோட்டா கல்வி வலயம் கோட்டம் மூன்றில் உள்ள மஸ்கெலியா சென். ஜோசப் தேசிய கல்லூரி அருகில் பாரிய இரண்டு மரங்கள் உள்ளன.


அந்த மரங்களால் பாரிய அனர்த்தம் ஏற்படும் அபாயம் உள்ளது.

கடந்த சில நாள்களாக இந்தப் பகுதியில் கடுமையான காற்று வீசியது. எனினும் தெய்வாதீனமாக எந்த ஒரு ஆபத்தும் ஏற்படவில்லை.

இருந்த போதிலும் இந்த இரண்டு மரங்களாலும் எந்த நேரத்திலும் அனர்த்தம் ஏற்படலாம் என்று மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

அதனால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அனர்த்த முகாமைத்துவ அதிகாரி, கிராம உத்தியோகத்தர், மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பிரதேச சபைச் செயலாளர் ஹட்டன் கல்வி திணைக்கள அதிகாரிகள் உடன் கவனம் செலுத்தி இந்த இரண்டு மரங்களையும் வெட்டி அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாடசாலை மாணவர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள், நலன் விரும்பிகள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# சவால்களை வென்று சாதித்துள்ள நானாட்டான் டிலாசால் மாணவர்கள்




**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

தற்போது வெளியாகிய 2023 ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் பல சவால்களை வென்று திறமையான சித்திகளைப் பெற்றுள்ள மன்னார் நானாட்டான் டிலாசால் கல்லூரி மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் ஞானக்கோன் தனுஷன் வர்த்தகப் பிரிவில் 3ஏ சித்தி பெற்று மாவட்ட நிலையில் 02 ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.

விஞ்ஞான பிரிவில் வின்சன் ஜோரச் ஆன் யுஷானிக்கா 3ஏ சித்தி பெற்று மாவட்ட நிலையில் 06 ஆம் இடத்தை பெற்றுள்ளார்.

விஞ்ஞான பிரிவில் விநாயகமூர்த்தி அபிராமி 2ஏபி சித்தி பெற்று மாவட்டத்தில் 07ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.

வர்த்தக பிரிவில் ஜெகநாதன் அரிய ஜோய்னஸ் 2ஏசி சித்தி பெற்று மாவட்ட நிலையில் 10 ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.

கலைப் பிரிவில் ஜேசுதாசன் ஆன் டிலானி குலாஸ் 3ஏ சித்திகளை பெற்று மாவட்டத்தில் 4 ஆம் நிலையும், கோபாலகிருஷ்ணன் அபிஷா 3ஏ சித்திகளைப் பெற்று மாவட்டத்தில் 08 ஆம் நிலையையும் ஜோன் நோயல் ஜெரோசா லெம்பேட் 3ஏ சித்தி பெற்று மாவட்டத்தில் 15 நிலையையும் பெற்றுள்ளனர்.



# ஹட்டன் நஷனல் வங்கியால் வாடிக்கையாளருக்கு மரங்கள்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

உலக சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு ஹட்டன் நஷனல் வங்கி 48 சேவை நிலையங்களிலுமுள்ள வாடிக்கையாளர்கள், நிர்வாக உத்தியோஸ்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு மரக்கன்றுகளை விநியோகித்தது.

பதில் நிறைவேற்று அதிகாரி தமித் பல்லேவத்த எச்.என்.பி.டவர்ஸ் வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டார். ஹட்டன் நஷனல் வங்கியின் உத்தியோகஸ்தர்கள் 2009 முதல் பாரம்பரியமாக இருந்த சுற்றாடலைப் பாதுகாப்பதற்கான பசுமை உறுதி மொழியை புதுப்பித்தனர்.

நீடித்த எதிர்காலத்துக்கான தமது அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துவதன் மூலம் உலக சுற்றுச்சூழல் தினத்தைத் தொடர்ந்தும் அனுஷ்டிக்க உறுதி பூண்டனர்.





# காரைதீவில் மரம் நடுகை விழா!

( வி.ரி. சகாதேவராஜா)

தேசிய சுற்றாடல் வாரத்தை முன்னிட்டு காரைதீவு கமநல சேவைகள் நிலையத்தில் மரம் நடுகை காரைதீவு பிரதேச விவசாய போதனாசிரியை திருமதி சஜிகலா ரகுநந்தன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விவசாய உதவிப் பணிப்பாளர் திருமதி அழகுமலர் ரவீந்திரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

காரைதீவு பிரதேச விவசாய பெரும்போக உத்தியோகத்தர் பாத்திமா சர்ஜானா, விவசாய போதனாசிரியர் ( மத்தி) பி.பிரதீப் மற்றும் தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.



# மாங்கேணியில் நாக தரிசனம்!



( வி.ரி.சகாதேவராஜா)

யாழ்ப்பாணம், செல்வச் சந்நிதி ஆலயத்தில் இருந்து கதிர்காமம் நோக்கி பாதயாத்திரை சென்று கொண்டிருக்கின்ற அடியார்களுக்கு நாக தரிசனம் கிடைத்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மாங்கேணி என்னுமிடத்தில் இடம் பெற்றுள்ளது.

பாதயாத்திரீகர்கள் வழமைபோல 26 ஆவது நாளாக பிரதான வீதி ஊடாக வந்து கொண்டிருந்த போது முன்னால் சென்ற சிறுவனுக்கு அந்தப் பகுதியல் இருந்து் நாகம் ஒன்று படம் எடுத்துக் காட்சி கொடுத்துள்ளது.

அவருக்கு பின்னால் வந்த 15 அடியார்கள் அதனை கண்டு வணங்கினர்.

அதனை தொடர்ந்து அந்த நாகம் ஒரு சில நிமிடங்களில் அந்த இடத்தில் இருந்த ஆலமரத்தினுள் சென்று மறைந்து கொண்டது.

இதனையடுத்து பாதயாத்திரை குழுத் தலைவர் ஜெயாவேல் சாமி அந்த இடத்திலேயே அரை மணி நேரம் தரித்து நின்று வழிபட்டுப் பின்பு அந்த இடத்தில் இருந்து சென்றனர்.



# மட்டு. புனித மைக்கல் கல்லூரி மாணவர் வரலாற்றுச் சாதனை


(அஸ்ஹர் இப்றாஹிம்)

நாடளாவிய ரீதியில் உயர்தர விஞ்ஞானப் பிரிவு காணப்படும் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்ட இரசாயன புதிர்ப் போட்டியில் மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரி அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்றுச் சாதனை படைத்துள்ளது.

நாடளாவிய ரீதியில் பிரபலமான 201 பாடசாலைகள் பங்கு பற்றிய இந்தப் போட்டியில் 12 பாடசாலைகள் அடுத்த சுற்றுக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தன.அதன் பின்னர் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் புனித மைக்கல் கல்லூரி வெற்றிபெற்றது.

கல்லூரியின் வரலாற்றில் இரசாயனப் புதிர்ப் போட்டியில் இந்தக் கல்லூரி வெற்றிபெற்றது இதுவே முதல் தடவையாகும்.

அத்துடன் வெற்றிபெற்ற மாணவர்களையும் இந்த மாணவர்களைப் பயிற்றுவித்த இரசாயனவியல் ஆசிரியர்களான திருமதி பீ.கிருபாகரன் மற்றும் திருமதி பீ.சுகுணன் ஆகியோருக்கு அதிபர் உள்ளிட்ட கல்வி சமூகம் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA



# பிரதி மதுவரி ஆணையாளர் தங்கராஜா ஓய்வு பெறுகிறார்!



( வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை மது வரித் திணைக்களத் தின் பிரதி ஆணையாளரும் (மனித வளம்) முன்னாள் கிழக்கு மாகாண மதுவரி திணைக்கள உதவி ஆணை யாளருமான சண்முகம் தங்கராஜா தனது 60 ஆவது வயதில் ஓய்வு பெற்றார்.

அவருக்கு மது வரி திணைக்கள தலைமையகத்திலும் திருமலை மாகாண தலைமையகத்திலும் பிரியா விடை நிகழ்வு நேற்று முன்தினம் நடை பெற்றது.

சண்முகம் தங்கராஜா மதுவரித் திணைக்கள வரலாற்றில் கிழக்கு மாகா ணத்தில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட முதலாவது பிரதி ஆணையாளர் என்ற பெருமையை பெற்றவர்.

இவர் மதுவரி திணைக்கள கிழக்கு மாகாண உதவி ஆணையாளராக செயற்படும் அதேவேளை, முழு இலங் கைக்குமான பிரதி ஆணையாளராகப் பதில் கடமையையும் ஆற்றியிருந்தார்.

பெரியகல்லாற்றை பிறப்பிடமாக வும், கல்லடியை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் 32 வருட சேவை காலத் தில் கிழக்கு மாகாணத்தில் இருந்து முதன் முதலில் மது வரி பிரதி ஆணை யாளராக நியமனம் பெற்ற ஒருவர்.

# ஹட்டன் பிரதான வீதியில் விலகி ஐம்பதடி பள்ளத்தில் வீழ்ந்த கார்!

## மூவர் வைத்தியசாலையில் அனுமதி

(மஸ்கெலியா)

நேற்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணியளவில் தலைநகரில் இருந்த சாமிமலை பகுதிக்கு வந்து சென்ற சிறிய ரக கார் ஒன்று ஹட்டன் பிரதான வீதியில் வனராஜா பகுதியில் உள்ள கிறித்தவ ஆலயம் அமைந்துள்ள பகுதியில் வீதியை விட்டு விலகி சுமார் ஐம்பது அடி பள்ளத்தில் வீழ்ந்தது.

நேற்று மாலை மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் பல பகுதி களில் ஏற்பட்ட பனி மூட்டம் காரணமாக இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்த விபத்தில் காயமடைந்த மூன் றரை வயதுக் குழந்தை உட்பட மூவர் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என ஹட்டன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இந்த விபத்து தொடர்பாக பொலி ஸார் விசாரணைகளை நடத்தி வருகின் றனர் என அந்த அதிகாரி தெரிவித் தார்.





# இரண்டு இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு வழங்கல்

(த.சுபேசன்)

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையின் பயன்பாட்டுக்காக இரண்டு இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் நேற்று(07) வெள்ளிக்கிழமை காலை வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வானது சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

இதன்போது கனடா செந்தில் குமரன் நிவாரண நிறுவனத்தின் அனுசரணையில் 64 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு இரத்த சுத்தி கரிப்பு இயந்திரங்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை நிர்வாகத் திடம் உத்தியோக பூர்வமாகக் கைய ளிக்கப்பட்டன.

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையின் முன்னாள் வைத்திய அத்தியட்சகர் எஸ்.குமரவேல் மற்றும் புதிய வைத்திய அத்தியட்சகர் வைத் தியர் த.காண்டீபன் ஆகியோர் தலை மையில் இடம்பெற்ற இந்த உதவித் திட்டக் கையளிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கைக்கான கனடா நாட்டின் உயர்ஸ்தானிகர் எரிக் வாஸ் கலந்து கொண்டு வைத்திய உதவிப் பொருள்களைக் கையளித்திருந்தார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சமன் பத்திரன, யாழ் மாவட்ட சுகாதார சேவைகள் பண-ிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், செந்தில் குமரன் நிவாரண நிறுவன ஸ்தாபகர் திரு.டி.செந்தில்குமரன், யாழ். பல்க லைக்கழக மருத்துவ பீடம் மற்றும் போதனா மருத்துவமனையின் ஆலோ சகர் வைத்தியர் ஆ.தங்கராஜா ஆகி யோர் கலந்து கொண்டனர்.

இந்த இரத்த சுத்திகரிப்பு இயந்திரங் களின் உதவியுடன் நாளாந்தம் 4 நோயா ளர்களுக்கு இரத்த சுத்திகரிப்பு சேவையை வழங்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# பொத்துவில் சுகாதார பிரிவில் சிரமதானம்

(எம். எப். றிபாஸ்)

கட்டுமாணப் பணியா ளர்கள் சங்கம், பொத்துவில் பிரதேச சபை ஊழியர்கள் ஒன்றாக இணைந்து பொத் துவில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் சிரமதான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

பொதுச் சுகாதார பரிசோ தகர் எம். எஸ். எம்.அப் துல் மலீக்கின் மேற்பார்வை யின் கீழ் இடம்பெற்ற இந் தச் சிரமதான நிகழ்வானது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக சுற்றுவட்டம் முழு வதும் இடம்பெற்றது.

வைத்திய அதிகாரி உவைஸ் பாறூக் உட்பட ஊழி யர்கள், அமைப்புக்களின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.






# கட்டுத் துவக்குடன் கைதான நபருக்குப் பிணை வழங்கல்

(எம்.எம்.நௌபீக்)

திருகோணமலை ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஈச்சிலம் பற்று பிரதேசத்தைச் சேர்ந்த நபரொரு வர் சட்டவிரோதமாக உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட கட்டுத்துவக்கை வைத் திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஈச்சி லம்பற்று பொலிஸாரால் கைது செய் யப்பட்டார்.

அவர் மூதூர் நீதிவான் நீதிமன் றில் நேற்று முன்தினம் (6) ஆஜர் படுத்தப்பட்டதை அடுத்து சந்தேக நபரை 5 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல நீதிவான் உத்தரவிட்டார்.

சந்தேக நபரிடமிருந்து கைப்பற்றப் பட்ட கட்டுத்துவக்கை முறைப்படி அழிப் பதற்கு பொலிஸாருக்கு நீதிவான் உத் தரவிட்டார்.

# 3 ஆவது முறையாக நாளை இரவு 7.15க்கு பிரதமராக பதவியேற்கிறார் நரேந்திர மோடி



தேசிய ஜனநாயக கூட்டணியின் நாடாளுமன்ற குழு தலைவராக பிரதமர் மோடி ஏகமனதாக தேர்வுசெய்யப்பட்டார். இதையடுத்து, மத்தியில் ஆட்சி அமைக்க உரிமை கோரிய அவருக்கு குடியரசுத் தலைவர் அழைப்பு விடுத்தார்.

இந்த நிலையில், நாளை இரவு 7.15மணி அளவில் நடைபெறும் விழாவில், 3 ஆவது முறையாக மோடி பிரதமராக பதவியேற்க உள்ளார்.

மக்களவை தேர்தலில் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி 293 தொகுதிகளில் வெற்றி பெற்று, ஆட்சியை தக்கவைத்துள்ளது. இந்த கூட்டணி சார்பில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.பி.க்கள் கூட்டம் பழைய நாடாளுமன்றத்தின் மைய மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் பேசும்போது,

"பிரதமர் பதவிக்கு நரேந்திர மோடியே பொருத்தமானவர். கடந்த 10 ஆண்டுகளில் அவரது நேர்மை, திறமையை நாட்டு மக்கள் அறிந்து கொண்டனர். எனவே, தேசிய ஜனநாயக கூட்டணியின் நாடாளுமன்ற குழு தலைவர் பதவிக்கு மோடியின் பெயரை பரிந்துரை செய்கிறேன்" என்று முன்மொழிந்தார்.

இதைத் தொடர்ந்து, அமைச்சர்கள் அமித் ஷா, நிதின் கட்கரி, தெலுங்கு தேசம் தலைவர் சந்திரபாபு நாயுடு, பிஹார் முதல்வர் நிதிஷ் குமார், மதச்சார்பற்ற ஜனதா தள தலைவர் குமாரசாமி, மகாராஷ்டிர முதல்வர் ஏக்நாத் ஷிண்டே, துணை முதல்வர் அஜித் பவார், லோக் ஜனசக்தி கட்சி தலைவர் சிராக் பாஸ்வான், இந்துஸ்தான் அவாமி மோர்ச்சா தலைவர் ஜிதன்ராம் மாஞ்சி, அப்னா தளம் தலைவர் அனுபிரியா படேல், ஜனசேனா தலைவர் பவன் கல்யாண் உள்ளிட்டோர் இதை வழிமொழிந்தனர்.

நிறைவாக, தேசிய ஜனநாயக கூட்டணியின் நாடாளுமன்ற குழு தலைவராக மோடி ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டார். அப்போது, அரசியலமைப்பு சாசன புத்தகத்துக்கு தலைவணங்கி மரியாதை செலுத்திய மோடி,அதை எடுத்து கண்ணில் ஒற்றிக்கொண்டார். தொடர்ந்து, எம்.பி.க்கள் கூட்டத்தில் அவர் உரையாற்றுகையில்,

"மத்தியில் ஆட்சியை வழிநடத்த பெரும்பான்மை பலம் தேவை. அதே நேரம், நமது நாட்டை வழிநடத்த கருத்து ஒற்றுமை அவசியம். தற்போதுமத்தியில் மீண்டும் என்டிஏ கூட்டணி ஆட்சி அமைக்க உள்ளது. இந்த கூட்டணி 5 ஆண்டுகள் நிலைத்திருக்கும் என்று உறுதிபட கூறுகிறேன்.

வாஜ்பாய், ஜார்ஜ் பெர்னாண்டஸ், பால் தாக்கரே உள்ளிட்ட தலைவர்கள் என்டிஏ கூட்டணியை உருவாக்கினர். அந்த கூட்டணி இன்று ஆலமரமாக வளர்ந்து நிற்கிறது. நல்லாட்சி என்ற ஒற்றை மந்திர சொல்லில் கூட்டணி நிலைத்திருக்கிறது. அடுத்த 10 ஆண்டுகளும் மத்தியில் என்.டி.ஏ. கூட்டணி ஆட்சி நடத்தும்.

கடந்த 4 திகதி வாக்கு எண்ணும் நாளில் நாடு முழுவதும் வன்முறை சம்பவங்களை நிகழ்த்த எதிர்க்கட்சிகள் திட்டமிட்டு இருந்தன. ஆனால், மக்கள் என்.டி.ஏ. கூட்டணிக்கு ஆதரவாக வாக்களித்து 3 ஆவது முறையாக மத்தியில் ஆட்சி அமைக்க வாய்ப்பு வழங்கி உள்ளனர். என்.டி.ஏ. அரசு பதவியேற்பதை தடுக்க இண்டியா கூட்டணி தலைவர்கள் பல வகைகளில் முயற்சி செய்தனர். அவர்களது முயற்சி தோல்வி அடைந்துள்ளது." – என்றார்.

பின்னர், குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவை சந்தித்த பிரதமர் மோடி,எம்.பி.க்களின் ஆதரவு கடிதத்தை அளித்து, ஆட்சி அமைக்க உரிமை கோரினார். இதை குடியரசுத் தலைவர் ஏற்றுக்கொண்டு, ஆட்சி அமைக்க அவருக்கு அழைப்பு விடுத்தார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் நாளை (ஜுன் 9) இரவு 7.15 மணிக்கு நடைபெறும் விழாவில், தேசிய ஜனநாயக கூட்டணி அரசு பதவியேற்கிறது. 3 ஆவது முறை பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்க உள்ளார். அவருடன் முக்கிய அமைச்சர்களும் பதவியேற்கின்றனர்.

# தி.மு.க. புதிய எம்.பி.க்களுடன் ஸ்டாலின் இன்று ஆலோசனை

தமிழகத்தில் புதிதாக தேர்வு செய்யப்பட்ட தி.மு.கவின் எம்.பி.க்கள் கூட்டம் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் இன்று மாலை நடைபெறுகிறது.

இந்தியா முழுவதும் மக்களவை பொதுத் தேர்தல் 7 கட்டங்களாக நடத்தப்பட்டது. முதல் கட்டத்தில் தமிழகம், புதுச்சேரியின் 40 தொகுதிகளுக்கும் ஏப்ரல் 19 ஆம் திகதி வாக்குப்பதிவு நடைபெற்றது. தொடர்ந்து, ஜுன் 4 ஆம் திகதி வாக்கு எண்ணிக்கை நடந்தது. இதில், தமிழகம் மற்றும் புதுச்சேரியின் 40 தொகுதிகளிலும் தி.மு.க. தலைமையிலான இண்டியா கூட்டணி அமோக வெற்றி பெற்றது.

இதையடுத்து, தமிழக மக்கள், தி.மு.கவினர் மற்றும் கூட்டணி கட்சியினருக்கு முதல்வர் ஸ்டாலின் ஜுன் 4 ஆம் திகதி இரவே நன்றி தெரிவித்தார். தொடர்ந்து, கடந்த 6 ஆம் திகதி மாலை சென்னை அண்ணா அறிவாலயத்தில், தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி



எம்.பி.க்களை முதல்வர் சந்தித்தார். அப்போது முதல்வருக்கு எம்.பி.க்கள் மற்றும் கூட்டணி கட்சி தலைவர்களும், எம்.பி.க்களுக்கு முதல்வர் ஸ்டாலினும் வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டனர்.

இந்த நிலையில், தி.மு.கவின் புதிய எம்.பி.க்கள் கூட்டம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று மாலை 6.30 மணிக்கு நடைபெற உள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் துரை முருகன் அறிவித்துள்ளார். புதிய எம்.பி.க்கள் அனைவரும் இக்கூட்டத்தில் தவறாமல் பங்கேற்குமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

மக்களவையில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்றும், மக்களவை உறுப்பினர்களின் பணிகள் குறித்தும் முக்கிய அறிவுறுத்தல்களை முதல்வர் இக்கூட்டத்தில் வழங்குவார் என தி.மு.க. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# அமெரிக்காவின் கடல் எல்லையில் ரஷ்ய போர் கப்பல் நிறுத்தப்படும்

## கியூபா விளக்கம் கூறுகின்றது



கியூபாவில் தலைநகர் ஹவானாவில் ரஷ்யக் கடற்படை கப்பல்கள் நிறுத்தப்படும் என்றும் இதனால் இப்பிராந்தியத்தில் எந்தவொரு அச்சுறுத்தலும் இல்லை எனவும் கியூபா கூறியுள்ளது.

உக்ரைன் தொடர்பாக அமெரிக்காவின் அணுகுமுறைகளையடுத்து ரஷ்யாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே அதிகரித்து வரும் பதட்டங்களுக்கு மத்தியில் இந்த போர்க் கப்பல்களின் கியூபாவை சென்றடைந்துள்ளது.

அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல் உட்பட நான்கு ரஷ்யப் போர்க் கப்பல்கள் அடுத்த வாரம் ஹவானாவை வந்தடைகின்றன என்று கியூபா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பயணம் கியூபாவிற்கும் ரஷ்ய கூட்டமைப்பிற்கும் இடையிலான வரலாற்று நட்புறவு மற்றும் சர்வதேச விதிமுறைகளை கண்டிப்பாக கடைபிடிக்கிறது என்று கியூபாவின் வெளியுறவு அமைச்சகம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் இருந்து 145 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள கியூபாவில் சக்திவாய்ந்த அணுசக்தி நீர்மூழ்கி கசான் மற்றும் மற்ற மூன்று கடற்படை கப்பல்கள் வழக்கத்திற்கு மாறாக அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஹவானா துறைமுகத்திற்கு கடற்படை வருகையின் போது, தேசத்திற்கு மரியாதை செலுத்தும் வகையில் ஒரு கப்பலில் இருந்து 21 சால்வோக்கள் சுடப்படும், இது கியூபாவின் புரட்சிகர ஆயுதப் படைகளின் பீரங்கி பேட்டரி மூலம் ஈடாக இருக்கும் என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பனிப்போரின் போது, சோவியத் யூனியனுக்கு கியூபா ஒரு முக்கியமான நட்பு நாடாக இருந்தது. 1962 ஆம் ஆண்டு வொஷிங்டனும் மாஸ்கோவும் போருக்கு அருகில் வந்தபோது, சோவியத் அணு ஆயுத ஏவுகணை தளங்கள் தீவில் நிலைநிறுத்தப்பட்டமை கியூபா ஏவுகணை நெருக்கடியை தூண்டியது.

இந்தச் சம்பவம் கியூபா மீது அமெரிக்கா வர்த்தகத் தடையை விதிக்க வழிவகுத்தது. அது இன்றும் நடைமுறையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# உக்ரைன் ஜனாதிபதியிடம் பகிரங்க மன்னிப்பு கோரினார் ஜோ பைடன்



உக்ரைன் ஜனாதிபதியிடம் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் முதல் முறையாக பகிரங்கமாக மன்னிப்புக் கோரியுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வோலோடிமிர் ஜெலென்ஸ்கியை, பைடன் பாரிஸில் சந்தித்த போதே மன்னிப்பை கோரினார் என தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்கா ஏற்கனவே உக்ரைனுக்காக அனுமதித்த இராணுவ உதவி இன்னும் உக்ரைனுக்கு அனுப்பப்படாமை தொடர்பிலேயே இந்த மன்னிப்பைக் கோரியுள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

உக்ரைனுக்கான 61 பில்லியன் டொலர் இராணுவ உதவிப் பொதியை காங்கிரஸில் பழமைவாத குடியரசுக் கட்சியினர் ஆறு மாதங்களாக நிறுத்தி வைத்துள்ளனர். இதற்காக தாம் மன்னிப்பை கோருகின்றேன் என பைடன் கூறியுள்ளார்.

இருப்பினும், அமெரிக்க மக்கள் தொடர்ந்தும் உக்ரைனுக்கு ஆதரவாகவே செயற்படுகிறார்கள் எனவும் நாங்கள் தொடர்ந்தும் முழுமையாக உங்களுடன் இருக்கிறோம் என்றும் பைடன் ஜெலென்ஸ்கியிடம் தெரிவித்துள்ளார்.

# ரஷ்யாவில் ஆற்றில் மூழ்கி 4 இந்திய மாணவர்கள் பலி

ரஷ்யாவின் நோவ்கோரோட் பல்கலைக்கழகத்தில் மருத்துவம் பயின்று வந்த 4 இந்திய மாணவர்கள் செயிண்ட் பீட்டர்ஸ்பெர்க் அருகே அமைந்துள்ள ஆற்றில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர் என அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில் உயிரிழந்த மாணவர்களது உடல்களை மீட்டு உறவினர்களிடம் ஒப்படைக்க ரஷ்ய நாட்டு அதிகாரிகளுடன் இணைந்து, இந்திய தூதரக அதிகாரிகள் பணியாற்றி வருகின்றனர்.

இதன்போது மகாராஷ்டிராவைச் சேர்ந்த ஹர்ஷல் அனந்தராவ் டேசலே, ஜிஷான் அஷ்பக் பின்ஜரி, ஜியா பிரோஜ் பின்ஜரி மற்றும் மாலிக் குல்ம்கோஸ் முகம்மது யாகூப் ஆகிய 4 மாணவர்களே உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக, மாஸ்கோவில் உள்ள இந்திய தூதகரம் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

“உயிரிழந்த மாணவர்களின் உடல்களை அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கும் வகையில் பணியாற்றி வருகிறோம்.

அவர்களைப் பிரிந்துள்ள குடும்பத்துக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவர்களுக்கு வேண்டிய அனைத்து உதவியையும் வழங்குவோம். பத்திரமாக மீட்கப்பட்ட மாணவருக்கு முறையாக மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டுவருகின்றது.” என குறிப்பிடப்பட்டுள்ளது.



பக்கங்கள் - 4

கனடா முரசு

சனிக்கிழமை 08/06/2024

## கார் பந்தய விபத்தில் இருவர் உயிரிழந்தனர்

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தின் ஹோகான்கன் பகுதியில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் இரண்டு பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

C2

# தண்ணீர் விநியோகம் கல்கரி நகரில் பாதிப்பு




பிரிட்டிஷ் கொலம்பியா, ஜுன்08

கனடாவின் ஆல்பர்ட்டா மாகாணத்தின் கல்கரி நகரில் நீர் விநியோகத்தில் தடை ஏற்பட்டுள்ளது.

நீர் விநியோக குழாய்களில் ஏற்பட்ட கசிவு காரணமாகவே நீர் விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது.

இதனால், கல்கரி நகரின் அனைத்துக் குடியிருப்பாளர்கள் மற்றும் வணிகங்களை தங்கள் நீர் பயன்பாட்டை கட்டுப்படுத்துமாறு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

ஜுன் 5ஆம் திகதி நகரில் நிகழ்ந்த ஒரு பெரிய நீர் உடைப்பை அடுத்தே இந்த அறிவிப்பு வெளியானது.

நகரின் அனைத்து குடியிருப்பாளர்களும் தண்ணீரை சேமிக்க தங்களால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலை தற்காலிகமானது எனவும் இதனை சரி செய்ய

C2

### சீனாவுக்கு அடுத்ததாக


# கனடாவுக்கு அச்சுறுத்தல்

# இந்தியாவினால்தானாம்!

கனடாவுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் இரண்டாவது நாடு இந்தியாதான் என கனடா தரப்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், செனேட்டர்கள் அடங்கிய தேசிய பாதுகாப்பு மற்றும் உளவு கொமிட்டி (National Security and Intelligence Committee of Parliamentarians - NSICOP), வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இந்தியா மீது இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

C2






# வேலையற்றோர் வீதம் கனடாவில் அதிகரிப்பு

ஒன்ராரியோ, ஜுன் 08

கனடாவில் வேலையற்றோர் விகிதம் மீண்டும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மே மாதம் வேலையற்றோர் விகிதம் 6.2 சதவீதமாக உயர்ந்துள்ளதாக கனடிய புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. ஏப்ரல் மாதத்தில் வேலையற்றோர் விகிதம் 6.1 சதவீதமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

கடந்த மாதம் கனடிய பொருளாதாரத்தில் 27 ஆயிரம் புதிய தொழில்கள் உருவாக்கப்பட்டன என கனடிய புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்தது.

கனடிய மத்திய வங்கி, நான்கு ஆண்டுகளில் முதல் முறையாக வட்டி விகிதங்களை குறைப்பதாக அறிவித்த இரண்டு

C2




# கனடிய எல்லை சேவை பணியாளர்களின் வேலைநிறுத்தம் புதன் வரையில் இல்லை

## சமரச முயற்சி தொடர்வதால் தள்ளிவைப்பு

ஒன்ராரியோ, ஜுன் 08

9,000 கனடிய எல்லை சேவைகள் நிறுவனத் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கம், மத்தியஸ்தம் தொடர்வதால், குறைந்த பட்சம் புதன்கிழமை வரை வேலை நிறுத்தம் செய்யப்போவதில்லை என்று தெரிவித்துள்ளது.

இரு தரப்பினரும் ஒரு ஒப்பந்தத்தை எட்டவில்லை என்றால் கனடாவின் பொதுச் சேவைக் கூட்டமைப்பு ஆரம்பத்தில் எல்லைப் பணியாளர்கள் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கே வேலை நிறுத்தம் செய்யவுள்ளதாகக் கூறியிருந்தது.

ஆனால் மாலை 4 மணிக்குப் பிறகு, பேச்சுவார்த்தைகள் தொடரும் என்று தொழிற்சங்கத்தின் செய்தித் தொடர்பாளர் கூறினார்.

வரும் நாள்களில் புதிய வேலை நிறுத்தக் காலக்கெடு அமைக்கப்படும் என்றும், மேசையில் உடன்பாடு எட்டப்படாவிட்டால் வேலைநிறுத்தம் இன்னும் சாத்தியமாகும் என்றும் செய்தித் தொடர்பாளர் பின்னர் நேற்று வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

பேச்சு மேசையில் தங்குவதற்கு கனடிய எல்லை சேவைகள் உறுதியளித்துள்ளமை மகிழ்ச்சி அளிப்பதாக பெடரல் திறைசேரி சபை தெரிவித்துள்ளது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இதேபோன்ற வேலைநிறுத்தம் கிட்டத்தட்ட வர்த்தக எல்லைப் போக்குவரத்தை ஸ்தம்பிதப்படுத்தியது மற்றும் நாடு முழுவதும் பெரும் தாமதங்களை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

### கனடாவுக்கு அச்சுறுத்தல்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கனேடிய ஜனநாயகத்தின் முதல் அச்சுறுத்தலாக சீனா விளங்குவதாக தெரிவித்துள்ள அந்த அறிக்கை, இரண்டாவது இடத்தில் முன்பு ரஷ்யா இருந்த நிலையில், தற்போது அந்த இடத்தை இந்தியா பிடித்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

கனடாவின் ஜனநாயக நடைமுறைகள் மற்றும் நிறுவனங்களில் தலையிடுதல், கனேடிய அரசியல்வாதிகள், இன அடிப்படையிலான ஊடகங்கள் மற்றும் இந்திய - கனேடிய இன கலாச்சார சமுதாயங்களை குறிவைத்தல் ஆகிய விடயங்கள் மூலம் இந்தியா இந்தச் செயல்களைச் செய்வதாக அந்த அறிக்கை கூறுகிறது.

ஆக, கனடாவின் ஜனநாயக நடைமுறைகள் மற்றும் நிறுவனங்களில் தலையிடுவதன் மூலம் இந்தியா கனடாவின் ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் இரண்டாவது நாடாக மாறியுள்ளது என்கிறது NSICOP இன் அறிக்கை.

இந்த அறிக்கைக்கு இந்திய தரப்பிலிருந்து இதுவரை எந்த பதிலும் கொடுக்கப்படவில்லை.

### கார் பந்தய விபத்தில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கார்ப் பந்தய நிகழ்வு ஒன்றின் போது இவ்வாறு விபத்து இடம் பெற்றுள்ளது.

மோட்டார் கார்களை பயன்படுத்தி பந்தயத்தில் ஈடுபட்டபோது அதில் ஓர் கார் வேகமாக சென்று மதில் சுவர்களில் மோதுண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்தில் காரின் சாரதியும் அவருடன் சென்ற மற்றொருவரும் காயம் அடைந்து உயிரிழந்துள்ளனர்.

இந்த மரணங்கள் தொடர்பில் சந்தேகம் ஏற்படும் வகையிலான பின்னணிகள் எதுவும் கிடையாது என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறு எனினும் பிரேத பரிசோதனைகளின் பின்னர் அடுத்த கட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வாகனம் கட்டுப்பாட்டை இழந்து மதில் சுவரில் மோதியதாக தெரிவிக்கப்படுகிறது.

### வேலையற்றோர்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாள்களின் பின்னர் இந்த அறிவித்தல் நேற்று வெள்ளிக்கிழமை வெளியாகியுள்ளது.

கனடிய தொழில் சந்தை தொடர்ந்து பலவீனமடைந்து வருவதாக புள்ளிவிவரத் திணைக்களத்தின் தொழிலாளர் கணக்கெடுப்பு தெரிவிக்கிறது.

அதிக வட்டி விகிதங்கள் இதற்கு முதன்மை காரணியாக நோக்கப்படுகிறது.

### தண்ணீர் விநியோகம்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேவையான பணி முன்னெடுக்கப்படுகிறது என நகர அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த சிக்கலைத் தீர்க்க நகரம் அதன் அனைத்து வளங்களையும் அர்ப்பணித்துள்ளது என நகர முதல்வர் ஜோதி கொன்டெக் கூறியுள்ளார். அதுவரை அனைத்து மக்களும் நீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நீர் குழாய் கசிவு எங்கே ஏற்பட்டுள்ளது என்பது இதுவரையில் கண்டறியப்படவில்லை. இதனைக் கண்டு பிடிப்பதற்கு சில நாள்கள் தேவைப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே நகர மக்கள் குளித்தல், ஆடை கழுவுதல் உள்ளிட்ட பல்வேறு தேவைகளுக்காக நீரை பயன்படுத்தும் போது சிக்கனமாக பயன்படுத்துமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் கொதித்து ஆரிய நீரை பருகுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

நீர் விநியோக தடையை சீர் செய்வதற்கு அதிகாரிகள் தொடர்ச்சியாக முயன்று வருகின்றனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நீர் விநியோக தடை காரணமாக கல்கரி நகர மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்க நேரிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



# பலஸ்தீனியர் ஆதரவுப் போராட்ட முகாமை யோர்க் பல்கலையில் அகற்றியது பொலிஸ்

ஒன்ராறியோ, ஜுன் 08

யோர்க் பல்கலைக்கழகத்தில் பலஸ் தீனியர்களுக்கு ஆதரவான போராட்ட முகாமை பொலிஸார் அகற்றியுள்ள னர்.

இந்த பலஸ்தீன ஆதரவு முகாம் யோரக் பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்ட மறுதினம் பொலிஸா ரால் அகற்றப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் புதன்கிழமை அதிகாலையில் யோர்க் பல்கலைக் கழகத்தின் கீல் வளாகத்தில் உள்ள ஹெர்ரி டபிள்யு ஆர்தர்ஸ் கொமன் பகுதியில் கூடாரங்களை அமைக்க ஆரம்பித்தனர்.

ஆனால் வியாழக்கிழமை (06) காலை யோர்க் பல்கலைக்கழகம் 'அங்கீகரிக்கப்படாத வளாக மைதான பயன்பாட்டுக்காக' அங்கிருந்தவர் களுக்கு அத்துமீறியமை தொடர்பான அறிவிப்புகளை வழங்கியது.

இதனைத் தொடர்ந்து பல்கலைக் கழகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க அங்கு சென்ற யோரக் பிராந்திய பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களை மைதானத்தை விட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டனர்.

ஆர்ப்பாட்ட முகாமில் இருந்த ஏறக் குறைய 40 எதிர்ப்பாளர்கள் பொலி ஸாரினால் வெளியேற்றப்பட்டுள்ள னர்.

அந்த முகாம் பகுதிக்கு மீண்டும் சென்ற ஒருவர் கைது செய்யப்பட் டார் எனப் பொலிஸார் வெளியிட் டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் பற்றீரியா தொற்று பற்றி எச்சரிக்கை




ஒன்ராறியோ, ஜுன் 08

'உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் பற்றீரியா தொற்று' சம்பந்தப்பட்ட சம்பவங்களின் அதிகரிப்பு குறித்து டொராண் டோவில் உள்ள பொது சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

எனவே, அதற்கான தடுப்பூசி இடுவதனை உறுதி செய்யுமாறு குடியிருப்பாளர்களை எச்சரித்துள்ளனர்.

இந்த ஆண்டு இதுவரை 13 பேருக்கு இன்வேசிவ் மெனிங் கோகோகல் நோய் ஏற்பட்டுள்ளதாகவும், இதில் இரண்டு பேர் உயிரிழந்திருக்கின்றனர் எனவும் டொராண்டோ பொது சுகாதார அதிகாரிகள் அமைப்பு கூறுகிறது.

மிகவும் பொதுவான ஒரு வருடத்தில், டொராண்டோ வில் சுமார் ஆறு பாதிப்புகளே ஏற்படும் எனவும், இந்த எண்ணிக்கை இப்போது குறிப்பிடத்தக்க அதிகரிப்பு எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.



# மது அருந்தாமலேயே போதை பெண்ணுக்கு விசித்திர நோய்

## றொறன்ரோவில் கண்டறிவு

றொறன்ரோ மாகாணத்தில் 50 வயதாக பெண்ணொ ருவருக்கு விசித்திர நோயொன்று இருப்பது கண்டறி யப்பட்டுள்ளது.

அந்த நோயினால் அந்தப் பெண் ஒரு துளி மதுபானம் கூட அருந்தாமல் போதையை உணர்கின்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அட்டோ ப்ரூவரி சிண்ட்ரோம் (Auto-Brewery Syndrome) என்ற இந்த நோயானது, குடல் நுண்ணுயிரி கள் கார்போஹைட்ரேட்டுகளை மதுவாக மாற்றுகின்றமை யினால் ஏற்படுகிறது.

இந்த நிலையில், நோயால் பாதிக்கப்பட்ட பெண் இரண்டு வருடங்களாக, கடும் சோர்வு, பேச்சில் தடுமாற்றம், இரத்தத் தில் மது அளவு அதிகரிப்பு போன்ற பிரச்சினைகளை எதிர் கொண்டு வந்துள்ளார்.

அதன்படி, மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் அந்த பெண்ணின் குடலில் பூஞ்சை காளான் அதிகமாக இருப்பதும், இந்த நுண்ணுயிரிகள் நுணுக்கமான தயா ரிப்பாளர்களைப் போல செயல்பட்டு, உடலுக்குள் மதுவை உற்பத்தி செய்வதும் தெரியவந்துள்ளது.

அத்துடன், இந்த மர்மமான அட்டோ ப்ரூவரி சிண்ட்ரோம் நோய் நிலைமையானது, 1940 களில் முதன் முதலாக கண்டறியப்பட்டது. இதுவரையில் 20 க்கும் குறைவான நோயாளர்களே பதிவாகியும் உள்ளனர்.





# இணையத் தீங்களுக்கு எதிரான சட்டத்தை திருத்தத் தயார் என்று அமைச்சர் அறிவிப்பு

ஒன்ராரியோ, ஜுன் 08

இணையத் தீங்குகளுக்கு எதிராக கனேடியர்களைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட அரசாங்கத்தின் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட சட்டத்தை திருத்துவதற்குத் தயாராக இருப்பதாக மத்திய நீதி அமைச்சர் அரிஃப் விரானி தெரிவித்துள்ளார்.

அதே நேரத்தில் எதிர்க்கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சியினர், லிபரல் கட்சியானது தாராளவாதிகள் தற்போதுள்ள சட்டங்களை நவீனமயமாக்குவதன் மூலம் வேகமாக செல்ல வேண்டும் என்று கூறுகின்றனர்.

விரானி பெப்ரவரியில் சட்டத்தை மீண்டும் தாக்கல் செய்த பின்னர் முதல் முறையாக வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் இணையத் தீங்குகள் சட்டத்தை ஆதரித்து உரையாற்றினார்.

அப்போதிருந்து, சட்ட மற்றும் தனியுரிமை வல்லுநர்கள் மற்றும் சிவில் சமூக வழக்கறிஞர்கள், பேச்சு சுதந்திரத்தை கட்டுப்படுத்துவதற்கான அதன் சாத்தியக்கூறுகள் குறித்து கவலை தெரிவித்தனர்.

இந்த சட்டமூலம் வெறுப்பு தொடர்பான குற்றங்களுக்கு கடுமையான குற்றவியல் தண்டனைகளை விதிக்கும்.

இனப்படுகொலையை ஆதரிப்பதற்காக ஆயுள் தண்டனை வரையிலான சிறைத்தண்டனை மற்றும் ஒரு நபர் ஒரு வெறுப்புக் குற்றத்தைச் செய்யக்கூடிய ஆதாரம் இருந்தால், ஒருவரின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை ஒரு நீதிபதிக்கு வழங்குவது ஆகியவை இதில் அடங்கும்.

கனேடியர்கள் வெறுப்புப் பேச்சுகள் குறித்து மனித உரிமைகள் புகார்களைப் பதிவு செய்வதற்கான புதிய வழியையும் இந்த சட்டமூலம் நிறுவுகிறது.



# 91 வயதுக் கோடீஸ்வரத் தொழிலதிபர் மீது பாலியல் வன்கொடுமைக் குற்றச்சாட்டுகள்

ஒன்ராரியோ, ஜுன் 08

கனேடிய தொழிலதிபரும் கோடீஸ்வரருமான ஃபிராங்க் ஸ்ட்ரோனாச் மீது டொரன்டோவின் மேற்குப் பகுதியில் உள்ள பொலிஸார் பாலியல் வன்கொடுமை விசாரணை தொடர்பான ஐந்து குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளனர்.

இப்போது குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ள 91 வயதான நபர், வாகன உதிரிபாகங்கள் தயாரிக்கும் மாபெரும் மேக்னா இன்டர்நேஷனல் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் முன்னாள் தலைமை நிர்வாகி என்று பீல் பிராந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர் மீது ஒரு பாலியல் வல்லுறவு வழக்கு, ஒரு பெண் மீது அநாகரீகமான தாக்குதல், ஒரு பலாத்கார சிறை வைப்பு மற்றும் இரண்டு பாலியல் வன்கொடுமைக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

1980கள் மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் குறிப்பிடப்படாத நேரத்திற்கு இடையில் நடந்ததாகக் கூறப்படும் சம்பவங்கள் தொடர்பில் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன என அவர்கள் தெரிவித்தனர்.